1973 நவம்பர் 28]

(இ) ஆம் எனில், விலையைக் குறைக்க அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: (அ) இல்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.

திரு. வா. மை. அப்துல் ஜப்பார்: இந்தக் கேள்வியை நான் கேட்டே ஓராண்டாகிறது. அன்றைக்கு இருந்த விலையைவிட இன்றைக்கு 1½ மடங்கு ஏறியிருக்கிறது. நெய்வேலியில் லீகோ கரி உற்பத்தியையும் நிறுத்திவிட்டதாகத் தெரிகிறது. ஆகவே நாள்தோறும் ஏறிக்கொண்டிருக்கிற விறகின் விலையைத் தடுத்து நிறுத்த வேறு மார்க்கங்கள் எதையாவது கண்டுபிடிக்க முடியுமா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: சென்னையில் விறகுக் கடைகளில் விறகு விற்பனையே இல்லை என்று சொல்லு கிறார்கள். 1971-இல் சென்னை சவுக்கு ரூ. 21 ஆக இருந்தது, 1973-இல் ரூ. 18 ஆகத்தான் இருக்கிறது. அதேபோல கடலூர் சவுக்கு 1971-இல் ரூ. 14 ஆக இருந்தது, இப்போது 13 ரூபாயாக இருக் கிறது. இப்படி விறகு விலை குறைந்திருக்கிறது என்று சொல்ல லாம். இந்த அளவுக்கு சென்னை நகரில் விறகு வியாபாரம் குறைந் திருக்கிறது.

தொழிலாளர் இடர் துயர்தணிப்பு நிதி

* 475 வினா—திரு. தி. சி. ஆ. சிவப்பிரகாசம்: மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு அரசு Industrial Accidents Distress Relief Fund என்று ஏற்படுத்தியிருக்கிறதா?

(இ) ஆம் எனில், அந்த நிதி எந்தெந்த இனங்களுக்கு செலவு செய்யப்படுகிறது?

(உ) 1972-73 நிதியாண்டில் எத்தனை பேர்களுக்கு உதவி யளிக்கப்பட்டது?

[1973 நவம்பர் 28

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** (அ) ஆம்.

(இ) தொழிலாளர் இழப்பீட்டுச் சட்டத்தின்கீழ் சம்பந்தப் பட்ட தொழிலாளர் இழப்பீட்டு ஆணையாளர் தீர்ப்பளித்த இழப் பீட்டுத்தொகை எக்காரணத்தினாலாவது வசூல் செய்ய இல்லாமல் இருக்கும்பொழுது விபத்தின்பொழுது நிலையான அங்கஹீனமுற்ற தொழிலாளருக்கோ அல்லது தொழிலாளர் இறந்துபடினை அன்னாரைச் சார்ந்திருந்த உறவினருக்கோ இந்நிதியிலிருந்து உதவி கிடைக்கும்.

(உ) ஒருவருக்கு ரூ. 1,000 இந்நிதியிலிருந்து அளிக்கப் பட்டது.

### திறமையுள்ள தொழிலாளர்களுக்கு நிர்வாகப் பயிற்சி

* 476 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப் பாரா—

திறமை படைத்த தொழிலாளர்களை தேர்ந்தெடுத்து அவர் களுக்கு நிர்வாகத் துறையில் பயிற்சி அளிக்கும் உத்தேசம் ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** திறமை மிக்க தொழிலாளர் களுக்குத் தொழில் நிறுவன நிர்வாகத்தில் பயிற்சி அளிப்பதற் கான செயற்குறிப்பு எதுவும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை

### திருப்பூருக்கு மின் வழங்கல்

* 477 வினா—திரு. சு. துரைசாமி : மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா :—

(அ) திருப்பூர் மின்வாரியத் துணை நிலையத்தில் Sub-station மின் சக்தியின் அழுத்தம் குறைவாக இருப்பதின் காரணமாக தொழில்கள் பாதிக்கப்படுவதை அரசு அறியுமா ?

(இ) ஆமெனில், அதன்மேல், எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?